فَاِنَّ الْجَحِيْمَ هِيَ الْمَاْوٰى ؕ﴿٣٩﴾ وَاَمَّا مَنْ خَافَ مَقَامَ رَبِّهٖ وَ
نَهَى النَّفْسَ عَنِ الْهَوٰى ۙ﴿٤٠﴾ فَاِنَّ الْجَنَّةَ هِيَ الْمَاْوٰى ؕ﴿٤١﴾
يَسْــَٔلُوْنَكَ عَنِ السَّاعَةِ اَيَّانَ مُرْسٰىهَا ؕ﴿٤٢﴾ فِيْمَ اَنْتَ مِنْ ذِكْرٰىهَا ؕ﴿٤٣﴾
اِلٰى رَبِّكَ مُنْتَهٰىهَا ؕ﴿٤٤﴾ اِنَّمَاۤ اَنْتَ مُنْذِرُ مَنْ يَّخْشٰىهَا ؕ﴿٤٥﴾ كَاَنَّهُمْ
يَوْمَ يَرَوْنَهَا لَمْ يَلْبَثُوْۤا اِلَّا عَشِيَّةً اَوْ ضُحٰىهَا ﴿٤٦﴾ ع ٢

سورۃ عبس مکیۃ وھی اثنتان واربعون اٰیۃ وفیھا رکوع واحد

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○

عَبَسَ وَتَوَلّٰۤى ۙ﴿١﴾ اَنْ جَآءَهُ الْاَعْمٰى ؕ﴿٢﴾ وَمَا يُدْرِيْكَ لَعَلَّهٗ
يَزَّكّٰۤى ۙ﴿٣﴾ اَوْ يَذَّكَّرُ فَتَنْفَعَهُ الذِّكْرٰى ؕ﴿٤﴾ اَمَّا مَنِ اسْتَغْنٰى ۙ﴿٥﴾
فَاَنْتَ لَهٗ تَصَدّٰى ؕ﴿٦﴾ وَمَا عَلَيْكَ اَلَّا يَزَّكّٰى ؕ﴿٧﴾ وَاَمَّا مَنْ
جَآءَكَ يَسْعٰى ۙ﴿٨﴾ وَهُوَ يَخْشٰى ۙ﴿٩﴾ فَاَنْتَ عَنْهُ تَلَهّٰى ۚ﴿١٠﴾ كَلَّاۤ
اِنَّهَا تَذْكِرَةٌ ۚ﴿١١﴾ فَمَنْ شَآءَ ذَكَرَهٗ ۘ﴿١٢﴾ فِيْ صُحُفٍ مُّكَرَّمَةٍ ۙ﴿١٣﴾ وقف لازم
مَّرْفُوْعَةٍ مُّطَهَّرَةٍۭ ۙ﴿١٤﴾ بِاَيْدِيْ سَفَرَةٍ ۙ﴿١٥﴾ كِرَامٍۭ بَرَرَةٍ ؕ﴿١٦﴾
قُتِلَ الْاِنْسَانُ مَاۤ اَكْفَرَهٗ ؕ﴿١٧﴾ مِنْ اَيِّ شَيْءٍ خَلَقَهٗ ؕ﴿١٨﴾
مِنْ نُّطْفَةٍ ؕ خَلَقَهٗ فَقَدَّرَهٗ ۙ﴿١٩﴾ ثُمَّ السَّبِيْلَ يَسَّرَهٗ ۙ﴿٢٠﴾

39. நிச்சயமாக நரகம், அதுவே (அவர்) ஒதுங்குமிடமாகும்.

40. மேலும், எவர் தன் இரட்சகனின் (சன்னிதியை அவன்) முன் நிற்பதைப் பயந்து, மனோ இச்சையைவிட்டு (தன்) ஆத்மாவைத் தடுத்துக்கொண்டாரோ அவர் _

41. அப்போது நிச்சயமாக சுவனம் _ அதுவே (அவர்) ஒதுங்குமிடமாகும்.

42. (நபியே!) மறுமையைப்பற்றி _ அது எப்பொழுது (வெளிப்பட்டு) நிலைபெறும் என உம்மிடம் அவர்கள் கேட்கின்றனர்.

43. அதைப்பற்றிக்கூறுவதற்கு நீர் எதில் இருக்கிறீர்? (அது பற்றிய பதில் உமக்குத் தெரியாது, அல்லாஹ் மட்டுமே அறிவான்).

44. அதன் முடி(வு பற்றிய அறி)வு, உமதிரட்சகனிடமே இருக்கின்றது.

45. நிச்சயமாக நீர் அதைப்பயப்படக்கூடியவர்களுக்கு அச்சமூட்டி எச்சரிக்கை செய்யக்கூடியவர்தான்.

46. அதனை அவர்கள் (கண்ணால்) காணும் நாளில் மாலையிலோ அல்லது அதன் முற்பகலிலோ (ஒரு சொற்ப நேரமே) தவிர தங்கியிருக்காதது போன்று (அவர்களுக்குத் தோன்றும்).

---

அத்தியாயம் : 80

## அபஸ _ அவர் கடுகடுத்தார்

வசனங்கள் : 42 மக்கீ ருகூஃ : 1

---

### அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன் அல்லாஹ்வின் பெயரால் (ஓதுகிறேன்).

1. (நமது நபியாகிய) அவர் கடுகடுத்தார்; மேலும், புறக்கணித்தார்

2. தன்னிடம் பார்வையிழந்தவர் வந்ததற்காக _

3. (நபியே! உம்மிடம் வந்த) அவர் பரிசுத்தவானாக ஆகிவிடக்கூடும் என்பதைஉமக்கு எது அறிவித்தது?

4. அல்லது அவர் (உம்முடைய உபதேசத்தை) நினைவுபடுத்திக் கொள்பவராகலாம்; அப்போது அவ்வுபதேசம் அவருக்குப்பயனளிக்கும்.

5. ஆகவே, எவன் பொருளாதார மேம்பாடு உடையவனோ _

6. அவனுக்காக நீர் செவிமடுக்கிறீர்.

7. மேலும், அவன் (இஸ்லாத்தை ஏற்காது) பரிசுத்தம் அடையாவிட்டால் உம்மீது குற்றமில்லை.

8. இன்னும், எவர் உம்மிடம் விரைந்தவராக வந்தாரோ அவர் _

9. அவரோ (அல்லாஹ்வைப்) பயந்த நிலையில் (உம்மிடம் வர),

10. அப்போது அவரைவிட்டும் நீர் அசட்டை செய்கிறீர்.

11. அவ்வாறன்று! நிச்சயமாக (குர் ஆனாகிய) இது உபதேசமாகும்.

12. எனவே, எவர் (இதனைக் கொண்டுநேரான வழியில் செல்ல) நாடுகின்றாரோ அவர் இதனை நினைவு கொள்வார்.

13. (இவ்வேதமானது) சங்கையாக்கப்பட்ட ஏடுகளில் (இருக்கிறது).

14. உயர்வாக்கப்பட்ட, பரிசுத்தமாக்கப்பட்ட (ஏடுகளில் இருக்கிறது).

15. (வானவர்களான) எழுதுவோரின் கரங்கள் கொண்டு (எழுதப் படுகின்றது).

16. (அவர்கள்) நல்லோர்களான, சங்கைமிக்கவர்கள் .

17. (காஃபிரான) மனிதன் சபிக்கப்பட்டுவிட்டான்; (நன்றி கெட்டு) அவனை நிராகரிக்கிறவனாக இருக்கச் செய்தது எது?

18. எப்பொருளிலிருந்து (நிராகரிக்கும்) அவனை (அல்லாஹ்வாகிய) அவன் படைத்தான் (என்று சிந்தித்தானா)?

19. ஒரு துளி இந்திரியத்திலிருந்து, அவனை (அல்லாஹ்வாகிய) அவன் படைத்தான்; பின்னர் அவனுக்கு (உரிய அனைத்தையும்) அவன் நிர்ணயித்தான்.

20. அப்பால் அவனுக்கு (விசுவாசம், விசுவாசமின்மை, நல்லவை, கெட்டவை, தாய்வயிற்றிலிருந்து வெளியேறுதல் ஆகியவற்றின்) வழியை அவன் எளிதாக்கினான்.

ثُمَّ اَمَاتَهٗ فَاَقْبَرَهٗ ﴿۲۱﴾ ثُمَّ اِذَا شَآءَ اَنْشَرَهٗ ﴿۲۲﴾ كَلَّا لَمَّا يَقْضِ مَآ
اَمَرَهٗ ﴿۲۳﴾ فَلْيَنْظُرِ الْاِنْسَانُ اِلٰى طَعَامِهٖۤ ﴿۲۴﴾ اَنَّا صَبَبْنَا الْمَآءَ
صَبًّا ﴿۲۵﴾ ثُمَّ شَقَقْنَا الْاَرْضَ شَقًّا ﴿۲۶﴾ فَاَنْۢبَتْنَا فِيْهَا حَبًّا ﴿۲۷﴾ وَّ
عِنَبًا وَّقَضْبًا ﴿۲۸﴾ وَّزَيْتُوْنًا وَّنَخْلًا ﴿۲۹﴾ وَّحَدَآئِقَ غُلْبًا ﴿۳۰﴾ وَّفَاكِهَةً
وَّاَبًّا ﴿۳۱﴾ مَّتَاعًا لَّكُمْ وَلِاَنْعَامِكُمْ ﴿۳۲﴾ فَاِذَا جَآءَتِ الصَّآخَّةُ ﴿۳۳﴾
يَوْمَ يَفِرُّ الْمَرْءُ مِنْ اَخِيْهِ ﴿۳۴﴾ وَاُمِّهٖ وَاَبِيْهِ ﴿۳۵﴾ وَصَاحِبَتِهٖ
وَبَنِيْهِ ﴿۳۶﴾ لِكُلِّ امْرِئٍ مِّنْهُمْ يَوْمَئِذٍ شَاْنٌ يُّغْنِيْهِ ﴿۳۷﴾
وُجُوْهٌ يَّوْمَئِذٍ مُّسْفِرَةٌ ﴿۳۸﴾ ضَاحِكَةٌ مُّسْتَبْشِرَةٌ ﴿۳۹﴾ وَوُجُوْهٌ
يَّوْمَئِذٍ عَلَيْهَا غَبَرَةٌ ﴿۴۰﴾ تَرْهَقُهَا قَتَرَةٌ ﴿۴۱﴾ اُولٰٓئِكَ هُمُ
الْكَفَرَةُ الْفَجَرَةُ ﴿۴۲﴾ ع

سُوْرَةُ التَّكْوِيْرِ مَكِّيَّةٌ وَّهِيَ تِسْعٌ وَّعِشْرُوْنَ اٰيَةً

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○

اِذَا الشَّمْسُ كُوِّرَتْ ﴿۱﴾ وَاِذَا النُّجُوْمُ انْكَدَرَتْ ﴿۲﴾ وَاِذَا الْجِبَالُ
سُيِّرَتْ ﴿۳﴾ وَاِذَا الْعِشَارُ عُطِّلَتْ ﴿۴﴾ وَاِذَا الْوُحُوْشُ
حُشِرَتْ ﴿۵﴾ وَاِذَا الْبِحَارُ سُجِّرَتْ ﴿۶﴾ وَاِذَا النُّفُوْسُ زُوِّجَتْ ﴿۷﴾

21. பிறகு, அவனை அவன் மரணிக்கச்செய்தான்; அப்பால் மண்ணறையில் அவனை அவன் ஆக்குகின்றான்.

22. பின்னர் தான் நாடும்போது அவனுக்கு (உயிர் கொடுத்து) அவன் எழுப்புவான்.

23. (கடமையை நிறைவேற்றி விட்டதாக காஃபிரானவன் கூறுவதுபோன்று) அல்ல! (அல்லாஹ்வாகிய) அவன் இவனுக்கு ஏவியதை இவன் நிறைவேற்றவில்லை.

24. ஆகவே, மனிதன் தன்னுடைய உணவின்பால் பார்க்கவும்.

25. (அதை உண்டாக்குவதற்கு) நிச்சயமாக நாமே (வானத்திலிருந்து ஏராளமான) நீரைத் தாராளமாகப் பொழியச் செய்தோம்.

26. பின்னர் பூமியை நன்கு பிளக்கச் செய்தோம்.

27. பின்னர் அதிலிருந்து தானியங்களை முளைக்கச் செய்கின்றோம்.

28. (இவ்வாறே) திராட்சை(க் கனி)களையும், (மற்ற) காய்கறிகளையும்_

29. ஜைத்தூனையும், பேரீச்சையையும்_

30. மரங்கள் அடர்ந்த தோப்புக்களையும்_

31. கனியையும், புல்லை(_தீவனங்களை)யும்_

32. உங்களுக்கும், உங்கள் கால்நடைகளுக்கும் பயனளிப்பதற்காக (முளைக்கச் செய்தோம்).

33. எனவே, (காதைச் செவிடாக்கும்) பயங்கர சப்தம் வந்து விடும்போது_

34. அந்நாளில் மனிதன் தன் சகோதரனை விட்டும் வெருண்டோடுவான்_

35. தன் தாயையும், தன் தந்தையையும் (விட்டு)_

36. தன் மனைவியையும், தன் மக்களையும் (விட்டு வெருண்டோடுவான்_)

37. அந்நாளில், அவர்களில் ஒவ்வொரு மனிதருக்கும் (தன் சுற்றத்தாரை விட்டும்) அவரைத்திருப்பிவிடும் ஒரு காரியம் உண்டு.

38. (எனினும்,) அந்நாளில் சில முகங்கள் பிரகாசமுள்ளவையாக (இருக்கும்)

39. சிரித்தவையாக, மகிழ்வுடையவையாக (இருக்கும்)_

40. இன்னும், சில முகங்கள்_அவற்றின் மீது அந்நாளில் புழுதி படிந்திருக்கும்.

41. (துக்கத்தால்) கருமை இருள் அவற்றை மூடியிருக்கும்_

42. அவர்கள் தாம் (இதயத்தால்) நிராகரித்தவர்கள்; (அவர்களின் செயல்களால்) பாவிகள்.

---

அத்தியாயம் : 81

## அத்தக்வீர் _ சுருட்டுதல்

வசனங்கள் : 29 மக்கீ ருகூஃ : 1

---

### அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன் அல்லாஹ்வின் பெயரால் (ஓதுகிறேன்).

1. சூரியன் (ஒளி நீக்கப்பட்டுச்) சுருட்டப்பட்டுவிடும் போது_

2. நட்சத்திரங்களும் (ஒளியிழந்து) உதிர்ந்துவிடும்போது_

3. மலைகளும் (பூமியிலிருந்து) பெயர்க்கப்பட்டு விடும்போது_

4. பத்துமாத நிறைகர்ப்பமுடைய ஒட்டகங்களும் கவனிப்பாரற்று (அலைய) விடப்படும்போது_

5. வனவிலங்குகளும் (ஊர்களுக்குள் வந்து) ஒன்று திரட்டப்படும்போது_

6. கடல்களும் தீ மூட்டப்படும்போது_

7. உயிர்களும் ஒன்று சேர்க்கப்படும்போது_